**இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கூட்டுதாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்தில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கூட்டுத்தாபனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன்

நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் ஆகியவை நியாயப் பெறுமதியில் (Fair Value) முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் ரூபா 2,424.37 மில்லியன் கிரயமுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கணக்கீட்டு கிரய முறைமை கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், சொத்துக்களின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மீள மதிப்பீடு செய்யும் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக மீள பயன்பாட்டிற்கு எடுக்க முடியாததாக இனங்காணப்பட்ட ரூபா 11.41 மில்லியன் கிரயமான மோட்டார் வாகனங்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 05 இற்கு முரணாக தொடர்ந்தும் நடைமுறையல்லாத பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ரூபா 715.67 மில்லியன் கிரயமான சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் தொடர்பிலான மதிப்பீட்டு வழுவினை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பொருத்தமான வகையில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை கணக்கீட்டு கொள்கை 16 இன், 36ஆம் பிரிவிற்கமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய ஏதேனும் உருப்படியொன்றின் மீள்மதிப்பீடானது மேற்கொள்ளப்படும் எனின், அதற்குரிய சொத்துக்களின் முழுத் தொகுதியும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முறையே ரூபா 24.74 மில்லியன் மற்றும் ரூபா 26.47 மில்லியன் கிரயமான 160 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஜீப் வண்டிகள் அவ்வாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பின்னாளொன்றில் அவற்றை மீள்மதிப்பீடு செய்து பதிவேடுகளில் உள்ளடக்குவதற்க உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்குகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 158.28 மில்லியன் கிரயமான முதலீட்டு சொத்துக்கள் இரண்டின் நியாயப் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கூட்டுத்தாபனம் வாடகை அடிப்படையில் வெளிவாரித் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த காணிகள் முதலீட்டு சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு அவற்றின் நியாயப் பெறுமதி மேலதிக தகவலொன்றாக வெளிப்படுத்தப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக 6 ஒப்பந்தங்களுக்கு உரிய செயற்திட்டங்களின் | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களில் உத்தியோகத்தர்களின் கையொப்பம் இடப்பட்டிராததுடன், | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், ஒப்பந் வருமானம் பணி நிறைவு செய்யப்பட்ட கட்டத்தின் (Stage |

| | | | |
|---|---|---|---|
| | செய்வேலைகள் வெளிவாரி பொறியியலாளர் ஒருவரின் சான்றுபடுத்தலின்றி சேவை பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட பட்டியல்களில் உள்ளடக்கப்பட்ட வேலையின் பெறுமதியை அடிப்படையாக கொண்டு ரூபா 266.76 மில்லியன் ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, ஒப்பந்த வருமானத்திற்குரிய ஒப்பந்த செலவினம் சரியாக இனங்காணப்படாமை காரணமாக 03 ஒப்பந்தங்களின் இனங்காணப்படடாத இலாபம் 100 சதவீதம் முதல் 1132 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் விலகலடைந்திருந்தது. | கையொப்பத்துடனான சான்றிதழ்கள் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | Completion) அடிப்படையில் இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்கீட்டு கொள்கை இலக்கம் 1.6 மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 23 இன் பிரகாரம், கடன் பெறல் கிரயம் (Borrowing Cost) கடன் தொகை பயன்படுத்தப்படும் உற்பத்திகளின் கிரயத்தின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 1,323 மில்லியன் ஆக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த கடல் மணல் இருப்புக் கிரயத்திற்கு, அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைக்குரிய ரூபா 261 மில்லியன் கடன் பெறுவனவுக் கிரயம் உள்ளடக்கப்படாத காரணத்தால் கடல் மணல் இருப்பு கிரயம் அந்த பெறுமதியால் குறைத்து | கடல் மணலை அகழ்ந்து இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியவுடன் அவற்வை விற்பனை செய்ய முடியும் என கூறி பெற்றுக்கொண்ட கடன் தொகைக்கு உரிய கடன் பெறுவனவு கிரயம் இருப்பின் பெறுமதிக்கு சேர்க்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், கடன் பெறுவனவுக் கிரயம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக 02 வாடிக்கையாளர் ஒப்பந்தங்களுக்குரிய நிலையான தொழில்நுட்பக் குழுவினால் (STC) வீதங்கள் திருத்தப்பட்டமையால், அந்த ஒப்பந்தங்களிலிருந்து ரூபா 6.20 மில்லியன் கூட்டுத்தாபனத்திற்கு இழப்பாகியிருந்ததுடன், இந்த மாற்றங்களுக்குரி சீராக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்படாத காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஒப்பந்த வருமானம் அந்த பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்ட வருமானம் அதற்கடுத்த வருடத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சரியாக கணிப்பிடப்பட்ட ஒப்பந்த வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் 2010ஆம் ஆண்டின் போது பவுசர்களாக புதுப்பிக்கப்பட்ட 10 டிரக்டர் டேலர்களின் பெறுமதி மற்றும் 2012ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் எக்ஸ்கவேட்டர் இயந்திரமொன்றின் மற்றும் 02 படகுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராததுடன், ரூபா 1,620,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 3 வாகனங்களின் பெறுமதிகளும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டினுள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் கெரவலப்பிட்டிய கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு 23 நிறுவனங்களால் அகற்றப்பட்ட கழிவு தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட பணம் ரூபா 238.11 மில்லியனாக காணப்பட்டதுடன், இவற்றுள் ரூபா 119.9 மில்லியன் ஒரு வருடத்திற்கு கிறைைவான மற்றும் ரூபா 118.21 மில்லியன் ஒன்று முதல் மூன்று வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது. எவ்வாறான போதிலும், கூட்டுத்தாபனத்தினால் குறித்த நிறுவனங்களுடன் கழிவுகளை அகற்றுவதற்குரிய நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை இதற்கு தாக்கமளித்திருந்தது. | கூட்டுத்தாபனத்தினால் குப்பைகள் அகற்றப்படும் அரச மற்றும் அரசல்லாத நிறுவனங்களுடன் கடதங்களின் மூலம் கிடைத்த இணக்கப்பாட்டிற்கு / உடன்படிக்கையின் பிரகாரம் கழிவுகளை பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றுள்ளதாகவும், நிலுவைப் பணத்தை செலுத்துமாறு அவ்வப்போது நினைவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். | கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்திற்கு கூட்டுத்தாபனம் வழங்கிய புகையிரத சிற்றுண்டிச்சாலைக்காக 03 வருட காலமாக கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 88.42 மில்லியன் மற்றும் அதற்குரிய வட்டியான ரூபா 33.64 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தில் நிலவிய ரூபா 1,142 மில்லியன் கடன் பட்டோர் மீதியில், 4-5 வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற கடன் பட்டோர் மீதி ரூபா 67 மில்லியனாக காணப்பட்டதுடன், 05 வருடங்களை விஞ்சிய கடன் பட்டோர் மீதி ரூபா 98 மில்லியன் ஆகும். அவ்வாறே கணக்காய்வாளரினால் கோரப்பட்ட கடன் பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களின் பெறுமதி ரூபா 872 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றுள் எந்தவொரு கடன் பட்டோர் மீதியும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வுப் பந்தியுடன் இணங்குவதுடன், கடன் பட்டோர் மீதிகளை துரிதமாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

கூட்டுத்தாபனத்தின் நீண்டகால கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அந்த மீதிகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

**கணக்காய்வு அவதானிப்பு**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிலவிய ரூபா 265 மில்லியனான ஒப்பந்தக் கடன் கொடுத்தோர் மீதிகளின் பெறுமதியில் 2 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற தீர்ப்பனவு செய்யப்படாத கடன் கொடுத்தோர் மீதி ரூபா 48 மில்லியன் ஆகும். அவ்வாறே கணக்காய்வினால் கோரப்பட்ட ரூபா 67 மில்லியன் பெறுமதியான கடன் கொடுத்தோர் மீதி உறுதிப்படுத்தலுக்காக எந்த கடன் கொடுத்தோரும் சான்றுபடுத்தியிருக்கவில்லை.

**முகாமைத்துவத்தின் கருத்துரை**

ஒப்பந்ததாரர்களால் செயற்திட்டங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, பொறியியலாளரின் பரிந்துரையுடடன் பட்டியல்களை சமர்ப்பிக்கும் போது கூட்டுத்தாபனத்தினால் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே எதிர்வரும் வருடங்களில் கடன் கொடுத்தோர் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**பரிந்துரை**

கூட்டுத்தாபம் செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அந்த மீதிகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறே பொறுப்பற்ற செலுத்த வேண்டிய மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 1.6.3 முற்பணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணிகளை விற்பனை செய்தமையால் கிடைத்த முற்பணத் தொகை ரூபா 493.13 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 489.80 மில்லியன் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது காணப்படுகின்றது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்ட முற்பணத் தொகைகளை கால ரீதியாக தீர்க்க வேண்டும். |
| (ஆ) | வேரஸ் கங்கை செயற்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனம் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்காக தொழிலாரம்பிப்பு முற்பணமாக ரூபா 5.96 மில்லியக் நிலமீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு வழங்கி 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், கம்பனி சமர்ப்பித்த பட்டியல்களக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது அந்த பணத்தை கழிப்பதற்கு அல்லது அந்த பணத்தை மீள பெற்றுக்கொள்வதற்க கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டினுள் உரிய தீர்ப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | தொழிலாரம்பிப்பு முற்பணங்களை கால ரீதியாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச்க் குடியரசின் நிதிப் பிரமாணக் | பணம் செலுத்துவதற்கு முன்னர் பெறுநரின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தாது கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு சட்ட நிறுவனமொன்றிற்கு | 2019 யூன் 26ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது இது தொடர்பில் பணிப்பாளர் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பணம் செலுத்துவதற்கு முன்னர் பெறுநரின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கோவையின் 139 (5) | செலுத்திய கொடுப்பனவு, வெளிவாரி நபரொருவரின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 4.11 மில்லியன் ஆகும். | சபைக்கு அறிவிக்கப்பட்டதுடன், பணிப்பாளர் சபையின் அறிவுரைக்கமைய 2019.06.25 ஆந் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டது. | ஆளடையாளத்தினை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | அமப/19/1643/116/165 ஆம் இலக்க மற்றும் 2019 யூலை 03ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் | சகதியை அகற்றுவதன் மூலம் பேரே குளத்தினை சுத்தப்படுத்துவதற்கான செயற்திட்டத்தின் 03 இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதியுடைய ரூபா 283.50 மில்லியன் ஆன போதிலும், அந்த அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதியை விட ரூபா 120.49 மில்லியன் கூடுதலாக கூட்டுத்தாபனம் அந்த இயந்திரங்களை கொள்வனவு செய்திருந்தது. | அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதியை விட கூடுதலாக இந்த இயந்திரங்களை கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்ததாக குறிப்பிடும் அவதானிப்புடன் இணங்குகின்றேன். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | | | |
| | (i) 2.2.2ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகள் உப -குத்தகைக்கு வழங்கும் போது அறவிடப்படும் உப குத்தகை நடைமுறைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உப – குத்தகை வழங்கும் போது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் கட்டணம் அறவிடப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| | (ii) 8.1.4ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபனம் அதன் துணைக் கம்பனிக்கு கடல் மணலை பக்கற்றுகளில் அடைத்து விற்பனை செய்யும் செயற்திட்டமொன்றிற்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 200 மில்லியன் கடன் வழங்கியிருந்ததுடன், இந்த பணத்தை மீள செலுத்துவதற்கு துணைக் கம்பனிக்கு உள்ள இயலுமை தொடர்பில் | துணைக் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மைக்காக தேவையான நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தில் தடையொன்றும் இல்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூட்டுத்தாபனம் மதிப்பீடொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. மேலும், கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், கூட்டுத்தாபனம் மற்றுமொரு தரப்பினருக்கு கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் காணப்படவில்லை. | | |
| (iii) | 8.2ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிலையான மற்றும் குறுங்கால வைப்புகளில் ரூபா 2,981.47 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (ஈ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 3.8ஆம் பிரிவு | தேசிய போட்டி அடிப்படையிலான முறைமையின் (NCB) கீழ் கொள்வனவு செய்யும் போது, விலைக் கேள்விக் காலம் ஆகக் குறைந்தது 14 முதல் 21 நாட்கள் திறந்து வைக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் போது மேற்கொண்ட ரூபா 35.70 மில்லியன் பெறுமதியான (வற் வரி நீங்களாக) 02 ஒப்பந்த பெறுகை நடவடிக்கைகளுக்காக விலைக்கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்கள் மாத்திரம் விலைக்கேள்வியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் போட்டி அடிப்படையில் அதிக எண்ணிக்கையான விலைக்கேள்வியாளர்களுக்கு விலைக்கேள்வி சமர்ப்பிக்க இயலுமான வகையில் உரிய நாட்களுக்குமைய கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 5.3.19(ஆ) பிரிவு | விலைக்கேள்வியாளர்களுக்கு இருக்க வேண்டிய முன் தகைமைகளை (Post Qualification criteria) தெளிவாக விலைக்கேள்வி ஆவணங்களில் உள்ளடக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் ரூபா 244.70 மில்லியன் பெறுமதியான Cuter Section Dredger | தேவைப்பாடுகளை உரிய முறையில் பூர்த்தி செய்யாது இந்த பெறுகையை கையளித்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இடம்பெறும் விசாரணைக்கு மேலதிகமாக | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகையின் போது விலைக்கேள்வி ஆவணங்களில் காணப்பட வேண்டிய முன் தகைமைகள் பெறுகைகள் குழுவிற்கு முன்னர் அறிவிக்காது திருத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகைகள் குழு குறிப்பிட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாது இந்த பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது. | மற்றுமொரு சுயாதீனமான குழுவினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (உ) 2006 இன் 35ஆம் இலக்க கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் | | | |
| (i) 2ஆம் பிரிவு | வெள்ளநீர் கட்டுப்பாட்டுக்கு பிரதானமாக பங்களிப்பு செய்யும் மற்றும் உயிர்ப் பல்வகைமை கொண்ட முத்துராஜவெல பாதுகாக்கப்பட்ட வனத்தின் அருகாமையில் அமைந்துள்ள, தெலதுர ''சுஹத'' மாவத்தையில் அமைந்துள்ள 6 ஹெக்டேயர்கள் பரப்பளவான தாழ்நில சதுப்பு நிலம் நிலமீட்டலுக்கு உள்ளாகியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்களின் பிரகாரம் அத்துமீறிய நிலமீட்டல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 4(அ) பிரிவு | அதிகாரச்சட்டத்தின் 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளை விற்பனை செய்யும் போது அதற்காக கைத்தொழில்கள், உள்ளூராட்சி அமைச்சுகளின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கம்பனியால் விற்பனை செய்யப்பட்ட ரூபா 272.62 மில்லியன் பெறுமதியான காணியொன்றுக்காக அவ்வாறு பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ரூபா 272.62 மில்லியன் ஆன பெறுமதிக்கு லங்கா பெற்றோலியம் டேர்மினல் கம்பனிக்கு இந்த காணித்துண்டை விற்பனையாக அகற்றுவதற்காக முன்னாள் செயலாளர் குழுவின் அங்கீகாரம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், உரிய அமைச்சர்களின் பரிந்துரையும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2010 யூலை 14ஆந் திகதிய 1662/17ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | மேல் மாகாணத்தில் அமைந்துள்ள கால்வாய்களில் பாதுகாக்கப்பட்ட காணிகளை (Reservation) காப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2010ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பாதுகாக்கப்பட்ட காணிகளை இனங்காணுவதற்கு அல்லது அந்த காணிகளில் வசிக்கும் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு ஆக்கபூர்வமான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | 2018 பெப்ரவரி 15ஆந் திகதிய 01/2018ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் சுற்றறிக்கையின் 9.6ஆம் பிரிவு. | அரச உத்தியோகத்தர்கள் தாம் வகிக்கும் பதவிக்கமைய சலுகை அனுமதிப்பத்திரத்தின் கீழ் மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக பெற்றுக்கொண்ட கடன் தொகையின் வட்டியின் 2/3 பகுதி சுற்றறிக்கை விதிகளுக்கு முரணாக மீள அளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் அவ்வாறு மீளளித்த வட்டியின் பெறுமதியானது ரூபா 616,228 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீளாய்வாண்டில் குழுமம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னைய இலாபம் முறையே ரூபா 755.73 மில்லியன் மற்றும் ரூபா 752.60 மில்லியனாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் வரிக்கு முன்னைய இலாபம் முறையே ரூபா 1,683.74 மில்லியன் மற்றும் ரூபா 1,620.29 மில்லியன் ஆகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் குழுமம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னைய இலாபம் முறையே ரூபா 928.01 மில்லியன் மற்றும் ரூபா 867.69 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மணல் விற்பனை வருமானம் ரூபா 803 மில்லியனால் மற்றும் கழிவு முகாமைத்துவப் பிரிவின் வருமானம் ரூபா 282 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமை இந்த வரிக்கு முன்னரான தேறிய இலாபம் வீழ்ச்சியடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவுப் போக்குகளின் பகுப்பாய்வு

(அ) 2015ஆம் ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நேரடிச் செலவினம் ரூபா 2,224 மில்லியனிலிருந்து ரூபா 4,715 மில்லியன் வரை நான்கு வருடக் காலப்பகுதியினுள் 112 வீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிச் செலவினம் ரூபா 435.46 மில்லியனிலிருந்து ரூபா 592.91 மில்லியன் வரை 36 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், நிதி வருமானம் 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த வருமானத்தின் 70 சதவீதம் அல்லது ரூபா 6,318.01 மில்லியன் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தும், ரூபா 2,786.14 மில்லியன் அரச மானியமாகவும் கிடைத்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது தேறிய இலாப விகிதம் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், இந்த நிலைமைக்கு கடல் மணல் வருமானம் வீழ்ச்சியடைந்தமை மற்றும் நிதிக் கிரயம் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நடைமுறைப் பொறுப்புகள், மொத்த சொத்துக்களினதும் மற்றும் பொறுப்புகளினதும் சதவீதமாக முறையே 40 சதவீதத்தினால் மற்றும் 105 சதவீதம் எனும் உயர்வான பெறுமதியை கொண்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உரிய சாத்தியவளக் கற்கையொன்று இல்லாது கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பேரே குளத்தின் படகு சேவையின் மூலம் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 3.48 மில்லியனான நட்டம் ஈட்டப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 40 மில்லியன் கிரயமான படகொன்று இந்த செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்திற்காக கூட்டுத்தாபனம் மேற்கொண்ட மொத்த கிரயம் ரூபா 41.02 மில்லியன் ஆகும். | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொரோனா தொற்றுநோய் நிலைமை ஆகிய காரணங்களால் இந்த பணிகளுக்கு தடை ஏற்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முத்துராஜவலயில் அமைந்துள்ள சுமார் 04 ஏக்கர் பரப்பளவுள்ள காணியொன்று தனியார் கம்பனியொன்றுக்கு உப-குத்தகைக்கு (Sub lease) வழங்கும் போது அறவிடப்பட வேண்டிய உப குத்தகைக் கட்டணமான ரூபா 56.60 மில்லியன் ரூபா 2 மில்லியனாக கணிப்பிடப்பட்டு அறவிடப்பட்டமையால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 54.60 மில்லியன் ஆகும். மேலும், இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய ஆரம்ப குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள குறித்த வரியை மூன்றாம் தரப்பினருக்கு சாட்டும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், இங்கு அவ்வாறானதொரு சாட்டுதல் இடம்பெற்றிராததுடன், ஆரம்ப குத்தகை ஒப்பந்தம் அவ்வாறே காணப்படுகின்றது. | கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் உப குத்தகை முறைமையின் கீழ் கணிப்பிடப்பட்ட குத்தகை அறவிடப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முத்துராஜவலயில் அமைந்துள்ள சுமார் 02 ஏக்கர் பரப்பளவுள்ள காணியொன்றை அரச கம்பனியொன்றுக்கு ரூபா 272.62 மில்லியனுக்கு விற்பனை செய்யும் போது காணியின் தற்போதைய மதிப்பீட்டினை பெற்று, 2017ஆம் ஆண்டின் போது மற்றுமொரு காணியை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது பயன்படுத்திய மதிப்பீட்டினை அடிப்பண்டயாக கொண்டு காணியை விற்றமையால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 12.10 மில்லியன் ஆகும். அவ்வாறே, இந்த காணிகள் ‘‘விற்பனை அடிப்படையில்’’ அகற்றப்பட்ட போதிலும், ‘‘குத்தகை அடிப்படையில்’’ காணிகளை அகற்றும் போது அடிப்படையாக கொள்ளப்படும் மதிப்பீடொன்றின் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. | மீள மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு அதிக காலம் எடுக்கும் என்பதால் அந்த காணித்துண்டை அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | காணிகளை விற்பனை செய்யும் போது, காணியின் தற்போதைய மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அகற்றுவதற்குரிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | கடல் மணல் இருப்பின் மீள் கட்டளை இருப்பு மட்டத்தினை தீர்மானித்து, இருப்பு கட்டுப்பாடு மேற்கொள்ளாமையால் மணல் இருப்பு குறைவடைந்த சந்தர்ப்பங்களில் கடல் மணலை பெற்றுக்கொள்வதற்கு முத்துராஜவல பிரதேசத்தில் இலங்கை மின்சார சபைக்கு கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்பட்ட காணியொன்றின் ரூபா 351.3 மில்லியன் மணல் வெட்டி அகற்றப்பட்டிருந்த போதிலும், 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அதனை மீள நிரப்புவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் மணலை அகற்றுவதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக மீள நிரப்ப வேண்டிய நிலப்பகுதி 1,034,846 கன மீட்டர்களாக காணப்பட்டது. | ஏற்பட்ட மணல் பற்றாக்குறைக்கு இவ்வாறு மணல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவற்றை மீள நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடல் மணல் இருப்பின் முகாமைத்துவத்தினை ஆக்கபூர்வமாக மேற்கொள்ள வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் சந்தையில் காணப்பட்ட ரூபா 1,453 மில்லியன் பெறுமதியான 07 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக மாத்திரம் போட்டி அடிப்படையில் விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது எந்த ஒப்பந்தத்தினையும் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. கூட்டுத்தாபனம் விலைக்கேள்விக்காக முன்வைக்கும் கூறுவிலைகள் சந்தை விலையிலும் உயர்வாக காணப்பட்டமை இதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனம் போட்டி அடிப்படையில் சந்தைப் பங்கினை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தற்போது இடம்பெறும் கடல் மணல் அகழ்வினைத் தடுப்பதற்கு கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாதிருந்தமையால் அவ்வாறான பிரிவுகளை திருத்தியமைப்பதற்காக 2012ஆம் ஆண்டு அதிகாரச்சட்டம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரச்சட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, சட்டத்தில் நிலவும் இவ்வாறான குறைபாடுகளின் அடிப்படையில் அத்துமீறிய கடல் மணல் அகழ்வு தொடர்பில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், கூட்டுத்தாபனத்தால் தொடுக்கப்பட்ட பெரும்பாலான வழங்குகளில் கூட்டுத்தாபனத்திற்கு பாதாகமான நிலைமை உருவாகியிருந்தது. | திருத்தப்பட்ட கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. பாராளுமன்றதிற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. | கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தை திருத்தி அதன் நலன்களை கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்த வேண்டும். |

**3.3 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களனி, பியகம, வத்தளை மற்றும் பேலியகொட பிரதேச செயலாளர் பிரிவுகளினுள் ஏற்படும் வெள்ள நிலைமைகளின் போது, இந்த | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் ஆக்கபூர்வமாக |

| | | |
|---|---|---|
| பிரதேசத்தில் வதியும் மக்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் சேதங்களை குறைக்கும் நோக்கில் 2016ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3,000 மில்லியனின் கீழ் பிரதேசத்திலுள்ள வடிகாண் அபிவிருத்தி செயற்திட்டம் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அதன் நிதி செயன்முன்னேற்றம் மற்றும் உள்ளபடியான செயன்முன்னேற்றம் முறையே 43 சதவீதம் மற்றும் 53 சதவீதம் ஆகும். இந்த செயற்திட்டத்திற்காக 2020ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 1,456 மில்லியன் திறைசேரியின் நிதியேற்பாட்டில் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2021ஆம் ஆண்டுக்காக இந்த செயற்திட்டத்திற்கு பாதீட்டின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக எதிர்காலத்தில் உரிய நோக்கங்களை நிறைவேற்றாது இந்த செயற்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு நேருமென தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | | முகாமை செய்யப்பட வேண்டும். |

**3.4 செயற்பாட்டுப் பெறுபேறுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1996ஆம் ஆண்டின் போது அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பாரிய கொழும்பு வெள்ளநீர் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக பாராளுமன்றத் தொகுதிக்கு மேற்கு எல்லையில் அமைந்துள்ள சுமார் 1000 ஏக்கர்கள் பரப்பளவாக தாழ்நில சதுப்பு நிலத்தினை நீரோந்துப் பிரதேசங்களாக பாதுகாப்பததற்கும் நிர்வகிப்பததற்கும் சிறப்பான நிறுவனமான இலங்கை நிலமீட்டல் மற்றும அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. அவ்வாறு சாட்டப்பட்ட காணிகளில் அத்துமீறிய | கருத்து தெரிவிக்கப்படவில்லை | அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்ட காணிகளை பாதுகாப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குடியேற்றங்கள் மற்றும் நிலமீட்டடல்களை முழுமையாக அகற்றும் முழுப் பொறுப்பும் (Sole Responsibility) கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றின் சுமார் 63 ஏக்கர்கள் பரப்பளவான காணி அத்துமீறிய குடியிறுப்பாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தமை மற்றும் மேலும் 82 ஏக்கர்கள் கூட்டுத்தாபனத்தினால் இறுதிப்படுத்தப்பட்டிருந்த (Divesting) காரணத்தால் அமைச்சரவையால் கூட்டுத்தாபனத்திடமிருந்து எதிர்பார்க்கும் பணியை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் கடந்த வருடத்தின் இறுதியில் 05 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய நீரோந்துப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அத்துமீறிய நிர்மாணங்கள் மற்றும் நிலமீட்டல்கள் 1324 இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவற்றை இனங்கண்டு அகற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் இலங்கையின் 6 மாகாணங்களில் தாழ்நில, சதுப்பு , தரிசு மற்றும் ஈரநிலங்களிள் எல்லைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதிலும், அந்த காணிகளின் அத்துமீறிய நிலமீட்டல்கள், அத்துமீறிய குடியிருப்புகளை இனங்காணும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், அந்த நிலைமைகளை பரிசோதிப்பதற்காக உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக எதிர்காலத்தில் பல்வேறு சூழல் பிரச்சினைகளுக்கு கூட்டுத்தாபனம் நேரடியாக முகங்கொடுக்கும் என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது. | கிடைக்கும் முறைப்பாடுகளுக்கமை மேற்கொள்ளப்படும் களப் பரிசோதனைகள் நீங்கலாக, அத்துமீறிய நிலமீட்டல்கள்/நிர்மாணங்கள் மற்றும் குடியேற்றங்களை இனங்காணுவதற்கு உரிய நடைமுறையொன்று இல்லை எனும் அவதானிப்புடன் இணங்குகின்றேன். | கூட்டுத்தாபனம் வர்த்தமானியில் வெளியிட்ட மாகாணங்களில் அத்துமீறிய நிலமீட்டல்கள்/ குடியேற்றங்களை இனங்காணுவதற்கு உரிய நடைமுறையொன்று துரிதமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | வேரஸ் கங்கை மழைநீர் வெளியேற்றம் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் காணிகளை கைப்பற்றும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த | செயற்திட்டத்தை சுவீகரிக்கும் செயன்முன்னேற்றம் மீளாய்வாண்டளவில் 6 வருடங்கள் கடந்துள்ளதுடன், பல்வேறு விடயங்களின் அடிப்படையில் | காணிகளை சுவீகரிக்கும் நடைமுறையை துரிதமாக நிறைவு செய்து, அதன் மூலம் பாதிப்படைபவர்களுக்கு நிவாரணம் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அதன் செயன்முன்னேற்றம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமையால், செயற்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டுரிமையாளர்களின் வீடுகளை மீள நிர்மாணிக்க முடியாது பல வருடங்களாக இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அவ்வாறே வாய்க்கல் ஒன்றிற்கு எல்லைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், சுவீகரிக்கப்பட்ட காணிகளில் அமைந்துள்ள சில வீடுகள் கால்வாயின் அபிவிருத்தி பணிகளால் தாழிறங்கியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் காணிகளை சுவீகரிக்கும் நடைமுறையில் தாமதம் ஏற்பட்டுள்ளதை இனங்காணக்கூடியதாக இருந்தது. | வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2013 ஆகஸ்ட் 30ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் வேரஸ் கங்கை மழைநீர் வெளியேற்றம் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தினை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 14,227 மில்லியன் கடன் தொகை பொது திறைசேரியின் பிணைமுறியின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியின் ஊடாக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் 2014 யூலை 14ஆந் திகதி 14 ½ வருடங்களில் கடன் தொகையை மீள செலுத்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியுடன் கடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், 2017 திசெம்பர் 07ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 14,227 மில்லியனுக்காக இணக்கம் காணப்பட்ட கடன் உடன்படிக்கை இரத்துச்செய்யப்பட்டு அத்திகதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையான ரூபா 2,550 மில்லியனுக்காக புதிய கடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு மற்றும் உரிய கடன் தவணை மற்றும் வட்டியை செலுத்துவதற்கு தேவையான பணம் மற்றும் செயற்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு தேவையான செலவினங்களை வருடாந்த நிதியேற்பாட்டின் அடிப்படையில் ஏற்பாடு செய்வதற்கும் | செயற்திட்டத்தின் பணிகளுக்காக நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதிலான தாமதங்களும், சமூக ரீதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படும் தாக்கங்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் செயற்திட்டத்தின் தாமதத்திற்கு தாக்கமளிக்கும். | செயற்திட்டத்தின் பணிகளை கால வரையறையினுள் நிறைவு செய்து பொதுமக்களுக்கு அதன் நலன்களை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். |

உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2018 ஒக்தோபர் 24ஆந் திகதி நிறைவு செய்வததற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 06 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அடையப்பட்ட உள்ளபடியான பௌதீக செயன்முன்னேற்றம் 60 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது. அவ்வாறான போதிலும், செயற்திட்டத்தின் அசாதாரணமான தாமதத்தினை தவிர்த்து குறுகிய காலத்தினுள் செயற்திட்டத்தினை நிறைவு செய்யக்கூடிய புதிய வேலைத்திட்டமொன்று முகாமைத்துவத்தினால் அறிமுகம் செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக செயற்திட்டத்தினால் 03 முதல் 06 மாதங்கள் வரையான குறுகிய காலத்தினுள் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய 18 பணிகள் பொதியொன்றாக உப குத்தகையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக வழங்கப்பட்டிருந்த தொழிற்பாட்டு (Mobilization) முற்பணத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 89.17 மில்லியன் ஆகும். இவற்றுள் ஒரு வருட தாமதக் காலத்தினை விஞ்சிய தீர்க்கப்படடாத முற்பண மீதிகள் ரூபா 52.16 மில்லியன் ஆகும்.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனம் கடந்த வருடத்தில் ரூபா 41 மில்லியன் பெறுமதியான 02 Long Arum Excavator இயந்திரங்களை கொள்வனவு செய்திருந்ததுடன், வழங்குநர் கூட்டுத்தாபனம் எதிர்பார்த்த தொழில்நுட்ப அமைப்புக் குறிப்பீடுகளில் (Technical Specification) குறிப்பிடப்பட்டுள்ள Long Aram Excavator இற்கு பதிலாக hort Aram Excavator இயந்திரங்களுக்கு Long Aram பகுதிகளை பொருத்தி தவறாக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்ததுடன், அவ்வாறு காணப்படும் போது பொருட்களை பெற்றுக்கொண்டு மீளாய்வாண்டின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | இவ்வாறு Long Aram Excavator இற்கு பதிலாக hort Aram Excavator இயந்திரங்களுக்கு Long Aram பகுதிகளை பொருத்தி தவறாக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்தமை தொடர்பில் மற்றும் அந்த இயந்திரங்கள் எதிர்பார்த்த செயலாற்றலுடன் சேவையில் ஈடுபடுத்த முடியாதென எனக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியளவில் கடல் மணலை கழுவி பக்கற்றுகளில் அடைக்கும் செயற்திட்டத்திற்காக துணைக் கம்பனி ரூபா 404.40 மில்லியன் செலவிட்டிருந்ததுடன், இதற்காக கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 200 மில்லியன் 12 சதவீத கடனாகவும், ரூபா 109 மில்லியன் முற்பணமாகவும் வழங்கப்பட்டிருந்ததுடன், கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக கூட்டுத்தாபனத்திற்கு தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 170.21 மில்லியன் ஆகும். அதனால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்திற்கு கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்த பணம் ரூபா 479.21 மில்லியனாக காணப்பட்டதுடடன், | கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைக்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமை தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் மற்றும் கம்பனியின் தற்போதைய நிர்வாகத்தினால் மீளாய்வு செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | புதிய செயற்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அந்த செயற்திட்டம் தொடர்பில் சாத்தியவளக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

இந்த பணத்தை செலுத்தும் நிதி இயலுமை கம்பனிக்கு காணப்படவில்லை. அவ்வாறே கடல் மணல் பக்கற்றுகளுக்காக சந்தைக் கேள்வியொன்று ஏற்படாமையால் இந்த செயற்திட்டம் மீளாய்வாண்டினுள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் இந்த கடன் தொகையை அறவிடுதல் தொடர்பில் அச்சுறுத்தலொன்று கூட்டுத்தாபனத்திற்கு நிலவுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.7 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தினால் ஆரம்ப சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொள்ளாது மாதின்னாகொட கிளை வீதியொன்றை நிர்மாணிப்பததற்காக கடந்த வருடத்தின் இறுதியில் ரூபா 112 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் காணிகளை சுவீகரிப்பதிலான சிக்கலான நிலைமையொன்றின் அடிப்படையில் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மேற்படி செலவினம் விளைவற்றதாகியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | புதிய செயற்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அந்த செயற்திட்டம் தொடர்பில் சாத்தியவளக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் கடந்த வருடத்தில் ரூபா 89.87 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட முத்துராஜவெல கொம்போஸ்ட் செயற்திட்டத்திற்குரிய கட்டிடமொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் சொத்துகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி பொருளாதார நலன்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3.8 பதவியணியினர் நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,875 ஆக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளபடியான பதவியணி 1,407 ஆனமையால் கூட்டுத்தாபனத்தின் பதவியணியில் 437 ஆன வெற்றிடங்களும், 31 மிகையும் காணப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தின துணைக் கம்பனியொன்றான நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனியிடமிருந்து மற்றும் எல் ஆர் டீ சீ சேவைகள் கம்பனியிடமிருந்து சம்பளத்தினை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணி முறையேமெ 102 மற்றும் 800 ஆக காணப்பட்டதுடன், இந்த பதவியணிக்காக கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் சம்பளமாக செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 486.86 மில்லியன் ஆகும். மேலும், மேற்குறிப்பிட்ட பதவியணிக்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் தமது பணியிடங்களின் கடமைகளுக்காக நாளொன்றுக்கு ரூபா 750 கொடுப்பனவின் அடிப்படையில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து 175 ஊழியர்களின் சேவையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,875 ஆக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளபடியான பதவியணி 1,407 ஆனமையால் கூட்டுத்தாபனத்தின் பதவியணியில் 437 ஆன வெற்றிடங்களும் காணப்பட்டன. கூட்டுத்தாபனத்தின் மிகைப் பதவியணி 31 வரை குறிப்பிடப்பட்டுள்ளது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கப்படடாத மற்றும் 2014/25ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைய 180 நாட்கள் பூர்த்தி செய்யும் போது கூட்டுத்தாபனத்தின் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளப்பட்டு இந்த சுற்றறிக்கைக்கமைய நிரந்தரமாக்கப்பட்ட 31 பதவியணியினரை உள்ளடக்குகின்றது. இந்த அனைத்து மிகைப் பதவியணியினரையும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.9 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 242.14 மில்லியன் பெறுமதியான 07 நடைமுறை வேலைகள் 02 முதல் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | நடைமுறை வேலைகளை கால அடியப்படையில் நிறைவேற்றி எதிர்பார்த்த பிரதிபலன்களை அடைந்துகொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலமாக முன்கொண்டுவரப்பட்டதுடன், இந்த செயற்திட்டங்கள் கால ரீதியில் நிறைவு செய்வதற்க கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காமையால் இந்த செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களை கூட்டுத்தாபனம் இழந்திருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனம் நடைமுறைப்படுத்திய 07 நிர்மாண ஒப்பந்தங்களிலிருந்து கிடைத்த மொத்த நட்டம் ரூபா 125.84 மில்லியனாக காணப்பட்டதுடன், கூட்டுத்தாபனத்தின் நிரந்தர ஊழியர்கள் செயற்படாது காணப்பட்ட போது ஊழியத்தை வாடகைக்கு (Manpower Hire) பெற்றமை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்திலான நலிவுகள் இந்த நட்டமான நிலைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. | | |
| (ஆ) | கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் போது ரூபா 520.74 மில்லியன் பெறுமதியான 03 ஒப்பந்தங்களுக்காக சேவை பெறுநரின் தொழிற்பாட்டு முற்பணத்தை (Mobilization advance) பெற்றுக்கொண்டிருக்கவில்லை. மேலும், சேவை பெறுநர் கம்பனியால் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, மீளாய்வாண்டின் இறுதியளவில் இந்த ஒப்பந்தங்களில் நிறைவேற்றிய வேலைகளின் பெறுமதியில் ரூபா 135.95 மில்லியன் சேவை பெறுநரிடமிருந்து பெற வேண்டியதாக காணப்பட்டதுடன், ரூபா 97.82 மில்லியன் பெறுமதியானது சேவை பெறுநரால் தொடர்ந்தும் சான்றுபடுத்த வேண்டியதாக காணப்பட்டது. அவ்வாறே, 2020ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மேற்படி ஒப்பந்தங்களுக்காக சேவை பெறுநரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 98.43 மில்லியன் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஒப்பந்த முகாமைத்துவம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

### 3.10 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய ரூபா 620.72 மில்லியன் ஒப்பந்த பெறுமதியுடைய 09 ஒப்பந்தங்களின் பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. கூட்டுத்தாபனம் ஒப்பந்த பணிகளை உரிய முறையில் மேற்பார்வை செய்யாமை, உப ஒப்பந்ததாரரின் செயற்திறனின்மை ஆகியன இதற்கு காரணமாக அமைந்திருந்தன. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | ஒப்பந்த பணிகளின் மேற்பார்வை மிகவும் செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | திருத்தப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 563.26 மில்லியனான வாடிக்கையாளர் செயற்திட்டமொன்றான கிரிமண்டல் மாவத்தையில் உத்தேசிக்கப்பட்ட வெள்ளநீர் கட்டுப்பாடு மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்ட கிரயம் ரூபா 297.63 மில்லியனாக காணப்பட்டதுடன், திரண்ட நட்டம் ரூபா 108.57 மில்லியன் ஆகும். வாடிக்கையாளர் நிறுவனங்களுக்கு செலுத்துவதற்கு இணங்கிய கூறுவிலைகளை (BOQ Rate) விட பணிகளுக்கான கூட்டுத்தாபனத்தின் செலவினம் மேற்கொண்டமை இதற்காக தாக்கமளித்திருந்தது. | திரண்ட நட்டத்தினை ஈட்டுவதற்கு செயற்திட்டத்தை கையளிக்கும் போது பொறியியலாளரின் மதிப்பீட்டு விலைகள் கூட்டுத்தாபனத்தின் விலைகளை விட குறைவாக காணப்பட்டமையே காரணமாக அமைந்திருந்தது. இது தொடர்பில் வாடிக்கையாளருடன் கலந்துரையாடி கூறுவிலைகளை மாற்றியமைக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | கூட்டுத்தாபனத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முன்னர் அளவிடைப் பத்திரங்களின் விலைகள் தொடர்பில் சேவை வாடிக்கையாளருடன் இணக்கம் காணப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு | 2019 செப்தம்பர் மாத்தின் போது செயல்நடவடிக்கைத் திட்டம் | இனங்காணப்பட்ட செயற்திட்டங்கள் மாத்திரம் |

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்டுள்ள (Projects to be identified) ரூபா 211 மில்லியனான செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இனங்காணுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. அவ்வாறே, ஆண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ரூபா 7,473 மில்லியன் பெறுமதியான 03 செயற்திட்டங்களின் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 04 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 89.32 மில்லியன் ஆகும்.<br>அவ்வாறே, மீளாய்வாண்டுக்குரிய முன்னர் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத செயற்திட்டமொன்றிற்காக ரூபா 553 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்வதற்கு செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | திருத்தப்பட்டதுடன், நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து செயற்திட்டங்களும் இனங்காணப்பட்டுள்ளன. | செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டியதுடன், திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

**4.2 ஆண்டறிக்கையினை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3ஆம் பந்தியின் பிரகாரம், கணக்காண்டு நிறைவடைந்து 140 நாட்களினுள் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2018ஆம் ஆண்டுக்கான ஆண்டிறிக்கை 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14ஆந் திகதிய என்பீ/எஸ்பP/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றம் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம், அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டுக்குரியதாக கூட்டுத்தாபனத்தினால் தமது விடயப்பரப்பிற்கு எடுக்கப்படும் பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருக்கவில்லை. இதன் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் இந்த இலக்குகளை இடையும் விதம், இலக்குகளை அளப்பதற்கான குறிகாட்டிகள் ஆகியன இனங்காணப்பட்டிருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களில் எமது விடயப்பரப்பிற்கு கொள்ளப்படும் பணிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் எதிர்வரும் சில மாதங்களினுள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட வேண்டும். |